# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1948/54 - 2016 ජනවාරි මස 08 වැනි සිකුරාදා - 2016.01.08

*1948/54 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 45 (2) ஆம் வாசகத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அமுல்படுத்த கல்வி அமைச்சின் கீழுள்ள விடயப்பரப்பின் கீழ் குறிப்பிட்ட பணிகள் கல்வி இராஜாங்க அமைச்சருக்கு பொறுப்பளிப்பதாக இத்தால் அறியத்தருகிறேன்.*

அகில விராஜ் காரியவசம்,<br>
கல்வி அமைச்சர்.

கல்வி அமைச்சு,<br>
இசுருபாய,<br>
பெலவத்தை,<br>
பத்தரமுல்ல,<br>
2016, சனவரி 08.

**கல்வி இராஜாங்க அமைச்சர் :**

பணிகள் மற்றும் செயற்பாடுகள்

1. தோட்டப் பிரிவின் பாடசாலை அபிவிருத்திக்குரிய கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட ஆக்கங்கள், பின்னூட்டல்கள் மற்றும் மதிப்பீடுகள்.
2. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாடசாலை அபிவிருத்திகளுக்குரிய கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட ஆக்கங்கள், பின்னூட்டல்கள் மற்றும் மதிப்பீடுகள்.
3. தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவான சர்வதேச பாடசாலை மேற்பார்வை.
4. விசேட தேவைகள் கொண்ட மாணவர்களுக்காக கல்வித் தேவைகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. தேசிய மற்றும் இணைப்பு மொழிக் கல்வியினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல்.
6. தமிழ் மொழி ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் வேலைத்திட்டங்களை மேற்பார்வை செய்யும் பணிகள்.

கல்வி அமைச்சு மற்றும் உரிய நிறுவனங்களுடன் இணைப்புப் பணிகளை மேற்கொண்டு மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பணிகளை மேற்கொள்ளல்.

1- 776




இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.